Appendix

[*Vide* answer to Starred question No. 191 on page 421]

பர்மாவிலிருந்து வந்த அகதிகளின் வாழ்வு செம்மையுறுவதற்காக நிறைவேற்றப்படும் திட்டங்கள்.

1. தாயகம் திரும்பிய அகதிகள் சிறு தொழில்களை அமைத்துக் கொள்வதற்காக 800 ரூபாயிலிருந்து 2,000 ரூபாய் வரை வாணிகக் கடன் உதவியளித்தல், தொழில்களைத் தொடங்கக் கூட்டுப் பங்கு நிறுவனம் அல்லது கூட்டுறவுச் சங்கம் ஒன்றை அமைப்பதில் மற்ற அகதிகளுடன் கூட்டுச் சேருபவருக்கு 5 000 ரூபாய் வரை வாணிகக் கடன் அளித்தல்.

2. அகதி ஒருவர் மாநில அரசாங்கப் பணியில் நியமிக்கப்படுவதற்கு ஏனைய தகுதிகள் எல்லாம் பெற்றிருப்பின் வயது, கல்வித் தகுதி குறித்த விதிகளைத் தளர்த்துதல்.

3. அரசுத் துறைகளில் உள்ள பணியில் சேர்க்கப்படுவதற்கு அவர்களுக்கு உயர்முதன்மை அளித்தல்.

4. அகதிகளின் மக்களுக்குக் கல்விச் சலுகை அளிக்கும் திட்டம்.

5. (அ) கல்வி நிறுவனங்களில் பின்வரும் வகையில் தனிப்பட்ட இடம் ஒதுக்குதல்:—

(1) எம்.பி., பி.எஸ். .. .. இரண்டு இடங்கள்.

(2) பி. எஸ்ஸீ. (வேளாண்மை) .. இரண்டு இடங்கள்.

(இ) பர்மாவிலிருந்து (இலங்கையிலிருந்து) தாயகம் திரும்பிய அகதிகளுக்காக தொழிற்பயிற்சி நிறுவனங்களில் 5 சதவீதத்திற்கு இடங்கள் ஒதுக்கப்படுதல், தொழிற்பயிற்சிப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ள மாணவர்களுக்கும் சிறப்பான வகையில் பயிற்சி உதவித் தொகையளித்தல்.

6. அகதிகளின் குழந்தைகளுக்காக திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மாத்தூரில் தங்கும் வசதிகளுடன் கூடிய பொதுப்பள்ளி (இருபாலாருக்கும் உரியது) ஒன்று அமைத்தல்.

7. அகதிகள் வேளாண்மையில் ஈடுபடுவதற்காக மற்ற வசதிகளுடன் நில வசதியும் அளித்தல்.

8. நிலையாகக் குடியேறுவது பற்றி விதியைத் தளர்த்தி மூப்புக்கால ஓய்வூதியம் அளித்தல்.

9. அரசு அளித்துள்ள கடன்வசதியுடன் சிறுதொழில் செய்ய அகதிகளுக்கென்று ஒதுக்கப்பட்ட பெட்டிக்கடைகள், கடைகள் ஆகியவற்றை உள்ளூர் அதிகாரிகள் அமைத்துக் கொடுத்தல்.

10. அகதிகளில் சார்பில் மகளிருக்கென தனிப்பட்ட விடுதி ஒன்றைத் தொடங்குதல்.

11. தொழில் அல்லது வாணிகம் எதற்கேனும் உரிமம், அனுமதி போன்றவை தேவைப்படும்போது அவற்றை வழங்குவதில் இவர்களுக்கு முதன்மை அளித்தல்.

12. தஞ்சாவூர் மாவட்டத்தில் புதுப்பட்டினத்தில் இரண்டு சிறுர் பள்ளிகளும், மகளிருக்கென தையற்பணி நிலையம் ஒன்றும் அமைத்தல்.

13. மதுரை மாவட்டம், தி. கல்லுப்பட்டியில் 20 அகதிகளுக்கென்றே தனியாகக் கருமார், தச்சர்ப் பயிற்சித் திட்டம் ஒன்றைத் தொடங்குதல்.

14. அதிக பாரம் ஏற்றப்படாத வண்டிகளுக்கான வலவர் பயிற்சியை சென்னை மாநகரில் அளித்தல்.